பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 22 வியாழக்கிழமை 05.05.2022 கதிர் 74

## துப்பாக்கிச்சூட்டில் இளைஞர் படுகாயம்

மொரட்டுவை - கொரலவெல்ல பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர் என்று விசாரணைகளில்

2

# ‘மொட்டு’வும் சுயாதீன அணியும் சங்கமம்; மீண்டும் பிரதி சபாநாயகரானார் ரஞ்சித்!

### மண்கவ்வினார் சஜித் அணியின் இம்தியாஸ்



**புதிய பிரதி சபாநாயகராக மீண்டும் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவு செய்யப்பட்டுள்ளார்.**

**நாடாளுமன்றில் இன்று பிரதி சபாநாயகர் தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் இடம் பெற்றது.**

**பிரதி சபாநாயகர் பதவிக்குச் சுயாதீன எம்.பிக்கள் குழு சார்பில் போட்டியிட்ட ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய 148 வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் 65 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர்.**

**மூன்று வாக்குகள் இதன்போது நிராகரிக்கப்பட்டன என்று சபாநாயகர் அறிவித்தார்.**

2

## அரச கைப்பொம்மையாக ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

### சாடுகின்றார் சஜித்



நாடாளுமன்றத்தில் இன்று வாக்கெடுப்பின் மூலம் பலரின் வேடங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய பிரதி சபாநாயராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னரே அவர் இந்தக்

2

## ஆளுங்கட்சி ஆதரவளித்தாலும் சுயாதீனமாகவே செயற்படுவேன்

### சபையில் புதிய பிரதி சபாநாயகர் உறுதி

எனக்கு ஆதரவாக ஆளுங்கட்சி வாக்களித்துள்ளது. எனினும், சுயாதீனமாகச் செயற்படும் எமது கட்சியின் (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி) முடிவு மாறாது. இதில் உறுதியாக இருக்கின்றோம்.

- இவ்வாறு புதிய பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தனக்கு வாக்களித்த உறுப்பினர்களுக்கு நன்றி கூறிய அவர், மக்களின் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

எதிரணிகளின் பலத்தைக் காண்பிக்க

2

## 65 பேர் மட்டுமே மக்களுக்காக நாடாளுமன்றில்

### சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டு



நாடாளுமன்றில் 65 பேர் மட்டுமே மக்களுக்காக உள்ளனர் எனவும், 148 பேர் ராஜபக்ஷக்களுடனேயே தற்போதும் உள்ளனர் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இன்று உரையாற்றிய அவர்,

நாடாளுமன்றில் நடத்தப்பட்ட, நடத்தப்படும் நாடகங்கள் இன்று

2

## நாடாளுமன்ற பிரவேச வீதிகளை 2 நாள்களுக்கு மூடியது பொலிஸ்!

### மக்கள் போராட்டத்தையடுத்து

நாடாளுமன்ற நடவடிக்கைகளை இடையூறு இன்றி முன்னெடுத்துச் செல்வதற்காக அதனைச் சுற்றியுள்ள பல வீதிகள் பொலிஸாரால் மூடப்பட்டுள்ளன.

இதன்படி, தியத்த உயன சந்தியில் இருந்து (பொல்துவ சந்தி) ஜயந்திபுர சந்தி வரையும்,

2

## தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கமும் ஹர்த்தாலுக்கு ஆதரவு

கொழும்பு, மே. 05

தேவையான எரிபொருள் கிடைக்காததன் காரணமாக நாளை நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கவுள்ள ஹர்த்தால் நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனைத் தெரிவித்தார்.

அதற்கமைய, இன்று நள்ளிரவு தொடக்கம் தனியார் பஸ்கள் சேவையிலிருந்து விலகுகின்றன எனவும் அவர் மேலும் கூறினார்.

## ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகைக்கு முன்பாகத் தொடரும் மக்கள் போராட்டங்கள்





கொழும்பு-காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக முன்னெடுக்கப்படும் மக்கள் எழுச்சிப் போராட்டம் இன்று 27 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு உடனடியாகப் பதவி விலகி, நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் எனக்

2

## மூதூரில் இளைஞரின் சடலம் மீட்பு!

மூதூர் - இறால்குழி பாலத்துக்கு அருகில் இளைஞர் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் மூதூர் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மீன்பிடிப்பதற்காகக் கடந்த திங்கட்கிழமை மாலை கடலுக்குச் சென்ற இளைஞரே நேற்றுப் புதன்கிழமை இவ்வாறு

2

## அரச கைப்பொம்மையாக ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கருத்தை வெளியிட்டார்.

அரச கட்சியின் கைப்பொம்மையாக ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய செயற்படுகின்றார் என்பது இன்று வெளியாகியுள் ளது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறினார்.

## 65 பேர் மட்டுமே ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

ஏனென்றால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய வைத் தெரிவு செய்வார்கள் என்று நான் நினைக்கவில்லை.

ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவுக்கு வாக்களித்து, அவரைப் பிரதி சபாநாயகராகத் தெரிவு செய்த 148 பேரும் தற்போதும் ராஜபக்ஷக்களுடனேயே இருக்கின்றனர்.

எனவே, அவரை எதிர்த்துப் போட்டியிட்ட இம்தியாஸ் பாக்கிர் மார்க்கருக்கு வாக்களித்த 65 பேர் மட்டுமே மக்கள் பக்கம் உள்ளனர்.

நாடாளுமன்றத்தில் என்ன நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டாலும் இங்குள்ள நாடககாரர்கள், பொய்யர்கள் அதற்கு எதிராகவே வாக்களிப்பார்கள். ஏனென்றால் அவர்களுக்கு ராஜபக்ஷக்களைப் காப்பாற்ற வேண்டும் - என்றார்.

## நாடாளுமன்ற பிரவேச .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜயந்திபுர சந்தியில் இருந்து கியன்ஹாம் சந்தி (டென்சில் கொப்பேகடுவ வீதி) வரையும் நாடாளுமன்ற பிரவேச வீதிகள் இன்றும் நாளையும் மூடப்பட்டிருக்கும்என்றுபொலிஸார்அறிவித்துள்ளனர்.

நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வுகள் காரணமாக, நாடாளுமன்றத்தைச் சூழவுள்ள வீதிகளில் பொதுமக்கள் போராட்டம் நடத்துவதால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களின் நடமாட்டத்துக்கு இடையூறு ஏற்படக்கூடும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இதனால், எவ்வித இடையூறும் இன்றி நாடாளுமன்றத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்படும் என்பதால், குறித்த வீதிகள் இரு நாள்களுக்குத் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், நாடாளுமன்ற வீதிக்குச் செல்லும் குறுக்கு வீதிகளும் இன்றும் நாளையும் மூடப்பட்டிருக்கும். மாற்று வழிகள் இல்லாத அந்த எல்லைக்குள் வசிக்கும் குடியிருப்பாளர்கள் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்திப் பயணிக்க முடியும் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, நாடாளுமன்ற நுழைவு வீதிகள் மூடப்பட்டுள்ளதால் பத்தரமுல்லையைச் சூழவுள்ள வீதிகளில் இன்று கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

பத்தரமுல்லை, பெலவத்த மற்றும் தலவத்துகொட ஆகிய பகுதிகளில் இவ்வாறு கடுமையான வாகன நெரிசல் நிலவுகின்றது.

## ஜனாதிபதி செயலகம், .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இருந்தும் வருகை தந்த மக்கள் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

இதனிடையே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சரவையைப் பதவி விலகுமாறு வலியுறுத்தி அலரிமாளிகைக்குமுன்பாகமுன்னெடுக்கப்பட்டு வரும் மைனா கோ கம போராட்டம் இன்று 11 ஆவது நாளாக தொடர்கின்றது.

இந்தப் போராட்டத்தில் ஒருவர் தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மூதூரில் இளைஞரின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மூதூர் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஆளுங்கட்சி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருந்த வாய்ப்பை, எதிரணிகள் தவறவிட்டுவிட்டன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## 'மொட்டு'வும் சுயாதீன .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புதிய பிரதி சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்வதில் கடந்த சில நாள்களாக சிக்கல் நிலை ஏற்பட்டிருந்தது. முன்னதாகபிரதிசபாநாயகராகச்செயற்பட்டிருந்த ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தமது பதவியிலிருந்து விலகுகின்றேன் எனத் தெரிவித்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அறிவித்திருந்தார்.

இந்தநிலையில், ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவின் பதவி விலகலை ஏற்றுக்கொள்கிறேன் எனஜனாதிபதிகடிதம்மூலம் அறிவித்துள்ளார் எனவும், புதிய பிரதி சபாநாயகர் ஒருவரை நியமிப்பதில் தற்போது சிக்கல் இல்லை எனவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று நாடாளுமன்றில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய, இன்று நாடாளுமன்றில் பிரதி சபாநாயகரைத் தெரிவு செய்வதற்காக இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பில் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மீண்டும் பிரதி சபாநாயகராகத் தெரிவாகியுள்ளார்.

இதேவேளை, பிரதி சபாநாயகர் தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பில் இரா. சம்பந்தன், மயந்த திஸாநாயக்க, எஸ். வினோநோகராதலிங்கம், உத்திக பிரேமரத்ன, இம்ரான் மஹ்ரூப், சி.வி.விக்னேஸ்வரன், விமல் வீரவன்ஸ, ஜோன் செனவிரத்ன ஆகியோர் கலந்துகொள்ளவில்லை.

பிரதி சபாநாயகருக்கான தேர்வில் ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் எவரும் போட்டியிடவில்லை.

எனினும், தமது கட்சி, ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை ஆதரிக்கும் என ஆளுங்கட்சியான மொட்டுக் கட்சி இன்று காலை சபையில் வாக்கெடுப்புக்கு முன்னர் அறிவித்திருந்தது.

## துப்பாக்கிச்சூட்டில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் பாணந்துறை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அலுபோமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே இவ்வாறு காயமடைந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைத் தேடி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தொலைபேசி இலக்கம்-
076 443 8622










# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எச்சரிக்கை மணி

இந்த ஜனாதிபதிக்கு – அரசாங்கத்துக்கு – எதிராக மக்கள் ஒன்றிணைந்து இருக்கிறார்கள். எழுச்சியோடு குரல் கொடுக்கின்றார்கள்.

வயிற்றுப்பசி எப்போதும் மக்களை ஒன்றிணைக்கும் என்று கருத்து வெளியிட்டுள்ளார் முன்னாள் பிரதமரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க.

இன்னும் ஆறு மாத காலத்தில் நாட்டின் நிலைமை படு மோசமானதாக இருக்கும் என்று அவர் கூறியிருக்கின்றார்.

விலைவாசி மென்மேலும் உயரும். எரிபொருள், அத்தியாவசிய பொருள்கள் போன்றவற்றின் தட்டுப்பாட்டினால் தொழில்கள் முடங்கும். வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் சாயும். நாடு நிரந்தர திவால் நிலைக்கு செல்லும் என்று அவர் எச்சரிக்கின்றார்.

அதாவது பசியும் பட்டினியும் இன்னும் தீவிரமாகும். அவர் முற்சொன்னபடி இந்த பசியும் பிணியும் நாட்டின் மக்களை மேலும் ஒன்றிணைக்கும்.

நாட்டின் இந்த இழிநிலைக்குக் காரணமான தரப்புக்கு எதிரான மக்கள் சீற்றமும் அதிகரிக்கும். அவர்கள் இடையேயான – மக்களிடையேயான – ஒன்றிப்பும் கூட தீவிரமடையும். இந்த இழப்புக்களில நமக்குக் கிட்டும் நன்மை இதுவாகத்தான் இருக்கும்.

இந்த நெருக்கடி நிலையை சமாளிப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பில் சில கருத்துக்களை விக்கிரமசிங்க கூறுகின்றார். அவையும் கவனிக்கப்பட வேண்டியவையாகின்றன.

- காலிமுகத்திடலில் இருந்து மட்டுமல்ல நாடு முழுவதிலும் இருந்தும் விடுக்கப்படும் கோரிக்கைகளை நாடும், அரசும், ஜனாதிபதியும், மக்களும் செவிமடுக்க வேண்டும். அக்கோரிக்கை ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலக வேண்டும் என்பதே.
- அரசு ஒரு புதிய பிரதமரை கொண்டுவரப் பார்க்கின்றது. ஆனால் ஜனாதிபதி தாம் பதவியில் நீடிக்க பார்க்கின்றார். எனினும் இந்த நிலைப்பாட்டினால் மக்களைச் சமாதானப் படுத்த இயலாது. எனவே அரசும் ஜனாதிபதியும் பதவி விலக வேண்டும்.
- பொருளாதாரத்தைத் தக்க வைத்து மேம்படுத்த குறுகிய கால, இடைக்கால, நீண்ட காலத் திட்டங்கள் அவசியம்.
- மக்களிடையே எழுந்துள்ள ஒற்றுமை உணர்வைத் தக்கவைக்க வேண்டும்.
- இளைஞர்கள் எழுப்பும் குரல் உரிய முறையில் செவிமடுக்கப்பட வேண்டும். அதை உதாசீனம் செய்யக்கூடாது.

– இவ்வாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைக்கும் ஆலோசனைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

ஆனால் அது – கவனத்தில் கொள்ளப்படுவது – கேள்விக்குறியே. மக்களின் நியாயமான எதிர்பார்ப்புகள், அவர்களின் நீதியான அபிலாஷைகள் போன்றவற்றை விடத் தாங்கள் ஆட்சியில் இருப்பதும், தங்களது குடும்பத்தின் பிடியில் அரசு இயந்திரம் செயற்படுவதை உறுதிப்படுத்துவதுமே ஆளும் தரப்பின் பிரதான இலக்காக இருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் மக்களின் நியாயமான குரல் செவிமடுக்கப்படுவதற்கோ அவர்களின் அந்த குரலுக்கு நியாயமான பிரதிபலன் கிட்டுவதற்கோ வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

மக்களை உதாசீனப்படுத்தி, அவர்களின் கோரிக்கைகளை புறந்தள்ளி, அரசியல் சுயலாபங்களுக்காக இந்த ஆட்சியாளர்கள் எதேச்சதிகாரமாக நடந்துகொள்கின்றனர். அதனால் ஏற்படப்போகும் மோசமான விளைவுகளை அவர்களுடன் சேர்ந்து முழு நாடும் எதிர்கொள்ள வேண்டி இருக்கின்றது.

அவை தொடர்பில்தான் எச்சரிக்கை மணி அடித்து இருக்கின்றார் – அபாயச் சங்கு ஊதி இருக்கின்றார் – பழுத்த அரசியல்வாதியான ரணில் விக்கிரமசிங்க.

ராஜபக்ஷக்களின் அறிவுக்கண்ணை, பதவிகள் மீதான அவர்களின் தீராத மோகமும் குடும்ப எதேச்சதிகாரமும் மூடி இருக்கின்றமையால், அந்த எச்சரிக்கை அவர்களின் காதில் விழப் போவதில்லை என்பது உறுதி.

# இலங்கையின் சமஷ்டித் தீர்வுக்கு தமிழக முதல்வர் உதவவேண்டும்

## நாடாளுமன்றில் கஜேந்திரன் எம்.பி. கோரிக்கை

இலங்கை இன்று வரலாற்றில் என்றும் இல்லாதவாறு வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் காரணமாக மக்கள் பாரிய பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தநிலையில் 74 வருட அனுபவத்தைக் கொண்டு அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் குற்றம் சுமத்தினார்.

நாடாளுமன்றில் நேற்று (புதன்கிழமை) உரையாற்றிய அவர் –

போரின் பின்னர் 13 வருடக்காலத்தில்கூட வடக்கு – கிழக்கு கடல் ரீதியான பொருளாதாரம் அனைத்து அரசாங்கங்களாலும் திட்டமிட்டு ஒடுக்கப்பட்டுள்ளது.

19 ஆவது திருத்தம் மீண்டும் கொண்டு வரப்படவேண்டும் என்று கூறப்படுகின்ற நிலையில் அது நடைமுறையில் இருந்த போதும் பல கோடி ரூபா கொள்ளையிடப் பட்டதாக கஜேந்திரன் குறிப்பிட்டார்.

இனவாதத்தை இந்த நாடு என்று கைவிடுகிறதோ அன்றே நாட்டுக்கு விடிவு கிடைக்கும் என்றும் கஜேந்திரன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியின் சார்பில் உரையாற்றியவர்கள் சர்வதேச நன்கொடையாளர்களின் மாநாட்டை நடத்தக் கோரியபோதும், புலம் பெயர்ந்த தமிழர்களின் உதவியை பெற்றுக் கொள்வதில் பின்னிற்கிறார்கள் என்று கஜேந்திரன் குற்றம் சுமத்தினார். இதேவேளை இன்று இலங்கைக்கு நிவாரணத்தை வழங்கும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் , இலங்கையில் ஒற்றையாட்சி ஒழிக்கப்பட்டு தமிழ் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி தீர்வு ஏற்பட உதவியளிக்கவேண்டும் என்றும் கஜேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# காலிமுகத்திடலில் வைத்து ஊடகவியலாளர்மீது தாக்குதல்



இலங்கையின் பிரபல இலத்திரனியல் ஊடகம் ஒன்றின் ஊடகவியலாளரான விந்தன பிரசாத் கருணாரத்னவை காலிமுகத்திடலில் வைத்து இனந்தெரியாத சிலர் தாக்கியுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று (புதன்கிழமை) காலை நடந்துள்ளது.

தாக்குதலை நடத்தியவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் அல்லர் எனவும் போராட்டத்துடன் சம்பந்தமில்லாத சிலர் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் எனவும் அது தொடர்பில் விசாரணை நடத்தி வருகின்றோம் எனவும் இலத்திரனியல் ஊடகத்தின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

விந்தன பிரசாத் கருணாரத்ன அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் தொடர்பான செய்திகளை நேரடியாக களத்தில் இருந்து வழங்கி வந்துள்ளார்.

மிரிஹானவில் நடந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பான செய்திகளை சேரிக்க சென்றிருந்த அவர், ஊடகவியலாளர்களுக்கு பொலிஸார் தடையேற்படுத்தியமைக்கு எதிராகக் குரல் கொடுத்தார் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# கறுப்பு சந்தையில் அதிகவிலைக்கு விற்பனை செய்யப்படும் எரிவாயு

சந்தையில் கொள்வனவு செய்ய போதிய தொகை எரிவாயு கொள்கலன்கள் இல்லாத போதிலும் கறுப்புச் சந்தையில் 10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் ரூபாவுக்கு எரிவாயு கொள்கலன் விற்பனை செய்யப்பட்டு வருவதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக சமையல் எரிவாயு கொள்கலன்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள், தொகையை மறைத்து வைத்து இடைத்தரகர்கள் ஊடாக அதிக விலைக்கு எரிவாயுவை விற்பனை செய்து வருகின்றனர்.

இதனைத் தவிர மேலும் சில தரப்பினர் திட்டமிட்டு எரிவாயு வரிசைகளில் நின்று எரிவாயுவை கொள்வனவு செய்து, அவற்றை 4 ஆயிரம் ரூபா இலாபத்துடன் வெளியில் விற்பனை செய்து வருகின்றனர் எனவும் நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர். சில எரிவாயு விற்பனை முகவர்கள் எரிவாயு தட்டுப்பாட்டுடன் எரிவாயு சர்வாதிகாரத்தை கையில் எடுத்து விற்பனைகளில் ஈடுபட்டுவருகின்றனர் எனவும் கூறப்படுகிறது. நுகர்வோர் அதிகார சபை உட்பட பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தலையீடுகளை மேற்கொண்டு இந்த அநீதியான செயலை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆடைத்தொழிற்சாலை பஸ் மீது பெண்ணால் கல்வீசித் தாக்குதல்!

## 13 பேர் வைத்தியசாலையில்

பொலன்னறுவை, அரலகங்வில பகுதியில் இருந்து ஆடைத் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று மீது மனம்பிட்டி குடாவெள பிரதேசத்தில் பெண் ஒருவர் கற்தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

மனநலம் பாதிக்கப்பட்ட பெண்ணொருவரால் எறியப்பட்ட கல்லில் இருந்து தப்பிக்க முற்பட்ட போது, பஸ் மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளது. இதன்போது காயமடைந்த 13 பேர் மனம்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலன்னறுவையில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் 12 பெண் ஊழியர்களும், பஸ்ஸின் சாரதியும் விபத்தில் காயமடைந்துள்ளனர் மனம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் மீது கற்களை வீசினார் எனக் கூறப்படும் மனநலம் பாதிக்கப்பட்ட பெண் நீண்ட நாள்களாக அரலகங்வில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் அவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு






# கொரோனாவால் பெய்ஜிங்கில் கடும் கட்டுப்பாடுகள் விதிப்பு

## 60 ரயில் நிலையங்கள் மூடல்; 158 பேருந்து வழித்தடங்களும் ரத்து!

சீனாவின் ஷாங்காயை அடுத்து தலைநகர் பெய்ஜிங்கிலும் கொரோனா தீவிரமாக பரவி வருவதால் பெருமளவு ரயில் மற்றும் பேருந்து சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. சீனாவில் வர்த்தக தலைநகரான ஷாங்காயில் கடந்த ஒரு மாத காலமாக கொரோனா தொற்று பரவல் உச்சத்தில் இருந்து வருகிறது. இதனால் அங்கு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், கடந்த 15 நாள்களாக சீன தலைநகர் பெய்ஜிங்கிலும் கொரோனா தொற்று வேகமெடுத்து வருகிறது. பெய்ஜிங்கில் ஒரே நாளில் புதிதாக 53 பேருக்கு தொற்று பாதிப்பு உறுதியாகி உள்ளது.

இந்த நிலையில் தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்காக பெய்ஜிங்கில் பொது போக்குவரத்து குறைக்கப்பட்டுள்ளது. 60 ரயில் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. 158 பேருந்து வழித்தடங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக தொற்று அதிகம் உள்ள Chaoyang மாவட்டத்திற்கு ரயில், பேருந்து போக்குவரத்து சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. கொரோனா பரவல் காரணமாக பெய்ஜிங்கில் ஏற்கனவே பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டு இருப்பதோடு ஹோட்டல்கள் செயல்படவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# டுவிட்டரை இனிவரும் காலங்களில் பணம் செலுத்தியே பயன்படுத்தலாம்




உலகின் மிகப் பெரிய பணக்காரரான டெஸ்லா தலைமை நிர்வாக அதிகாரியான எலான் மஸ்க், புகழ்பெற்ற சமூக வலைத்தளமான டுவிட்டர் நிறுவனத்தை கடந்த சில நாள்களுக்கு முன் 3.30 லட்சம் கோடிக்கு வாங்கினார். இதற்காக தனது டெஸ்லா நிறுவனத்தின் 44 லட்சம் பங்குகளை மஸ்க் விற்றார் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில், எலான் மஸ்க் வெளியிட்ட அறிக்கையில், 'இனி வரும் காலங்களில் டுவிட்டரை அனைவரும் இலவசமாகப் பயன்படுத்த முடியாது. அதைப் பயன்படுத்த சிறிது கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். இருப்பினும், சாதாரண பயனர்களுக்கு தற்போது போன்று இலவசமாக சேவை கிடைக்கும். அவர்கள் வழக்கம்போல் டுவிட்டரை பயன்படுத்தலாம். அதே நேரம், வர்த்தக நிறுவனங்கள், அரசு நிறுவனங்களிடம் இருந்து அவர்கள் பதிவிடும் டுவிட்டுக்கு சிறிய அளவிலான கட்டணத் தொகை வசூலிக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது' என்று பதிவிட்டுள்ளார்.

இதற்கிடையே, டுவிட்டரை வாங்கியது தொடர்பாகவும், அதன் விதிகளில் செய்ய இருக்கும் மாற்றங்கள் குறித்தும் எலான் மஸ்க் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்கும்படி இங்கிலாந்து நாடாளுமன்றம் தெரிவித்திருந்தது. இதற்கு இமெயிலில் பதிலளித்துள்ள மஸ்க், டுவிட்டரின் விதிமுறைகள் பற்றி இப்போது கருத்து கூறுவது சரியல்ல,' என்று தெரிவித்துள்ளார்.

# போரை முடிவுக்கு கொண்டு வர உக்ரைன் பேச்சுக்கு வரவில்லையாம்

### ரஷ்ய அதிபர் குற்றச்சாட்டு



உக்ரைன் மீது ரஷ்யப் படைகள் போர் தொடுத்து இரண்டு மாதங்களுக்கு மேலான நிலையில், ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். 1.3 கோடி மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இரண்டாம் உலகப் போருக்கு பின், மிக மோசமான இடம்பெயர்வு என்று கூறப்படுகிறது. இந்நிலையில், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், பிரான்ஸ் அதிபர் மக்ரோனிடம் தொலைபேசியில் பேசினார். அப்போது அவர் கூறுகையில், 'உக்ரைனுக்கு ஆயுதங்கள் சப்ளை செய்வதை மேற்கு நாடுகள் நிறுத்த வேண்டும்.

மோதலை முடிவுக்குக் கொண்டுவர ரஷ்யாவுடன் உக்ரைன் பேச்சு நடத்தவில்லை. உக்ரைன் மீது உரிய அழுத்தங்களை கொடுப்பதன் மூலமும், உக்ரைனுக்கு ஆயுதங்கள் சப்ளை செய்வதை நிறுத்துவதன் மூலமும் போரை முடிவுக்கு கொண்டு வரமுடியும். ரஷ்ய தரப்பில் பேச்சுக்கு தயாராகவே உள்ளோம்' என்றார். தொடர்ந்து மக்ரோன் கூறுகையில், 'உக்ரைன் மீதான படையெடுப்பால் உலகளாவிய உணவு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது' என்றார்.

# இத்தாலி நாட்டில் தண்ணீர் தேவையை வலியுறுத்தி நடைபெற்றது ஒளித்திருவிழா



இத்தாலி நாட்டின் பிரஸ்சேனான் நகரில் தண்ணீர் தேவையை வலியுறுத்தி நடைபெற்ற ஒளித் திருவிழா அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. இதில் புவி வெப்பமயமாதல், காடுகள் அழிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கலைஞர்கள் ஓவியங்களை காட்சிப்படுத்தினர்.

### தாக்குதல் ஓய்ந்தபாடில்லை

# மேலும் 2 நகரங்களை குறி வைக்கும் ரஷ்யா உக்ரைனில் எல்லையை விரிவுபடுத்த திட்டம்



ஆயுதங்கள் சப்ளையை தடுக்க ரயில் நிலையங்கள், வெடிமருந்து கிடங்குகள் மற்றும் ராணுவதளங்கள் மீது ரஷ்யா தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது. இதன் மூலம், மேலும் 2 நகரங்களை கைப்பற்றும் முயற்சியில் ரஷ்யா இறங்கி உள்ளது. ஒவ்வொரு நகரத்தையும் கைப்பற்றி எல்லையை விரிவாக்கம் செய்ய அது திட்டமிட்டுள்ளது. உக்ரைன் மீது போரை தீவிரப்படுத்தி உள்ள ரஷ்யா, ஒவ்வொரு நகரத்தையும் கைப்பற்றி அந்நாட்டுடன் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. அதன்படி, துறைமுக நகரமான மரியுபோல், கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனில் உள்ள முக்கிய பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

மரியுபோலில் உள்ள இரும்பு தொழிற்சாலையை முற்றிலும் கைப்பற்றும் முயற்சியில் ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. அங்குள்ள பதுங்கு குழியில் 500க்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் குழந்தைகள் அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட நிலையில், இன்னும் ஆயிரக்கணக்கானோர் சிக்கி உள்ளனர் என கூறப்படுகிறது. சில நாள்களாக மக்கள் வெளியேற்றத்திற்காக போர் நிறுத்தத்தை கடைப்பிடித்த ரஷ்யா, மீண்டும் தாக்குதல் நடத்தி வருகிறது. இதேபோல், கருங்கடல் ஒட்டி உள்ள ஒடேசா உள்ளிட்ட பகுதிகள் மீது ஏவுகணைகளை வீசி வருகிறது.

இந்த சூழலில், கைப்பற்றிய உக்ரைன் பகுதிகளை ரஷ்யாவுடன் இணைக்கும் முயற்சியில் ரஷ்யா தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. கிழக்கு பகுதியில் உள்ள டான்பாஸ் பிராந்தியத்தை பெருமளவில் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் ரஷ்யா கொண்டு வந்துள்ளது. இம்மாத இறுதியில் கிழக்கு உக்ரைனின் பெரும் பகுதி இணைக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறு ஒவ்வொரு நகரத்தையும் பிடித்து எல்லையை விரிவுப்படுத்தும் வேலையில் ரஷ்யா இறங்கி உள்ளது. இந்நிலையில், கிழக்கு உக்ரைனில் உள்ள இசியம் அருகே ரஷ்யாவின் 22 பட்டாலியன் படை குழுக்கள் முகாமிட்டுள்ளன.

இந்த குழுக்கள் தாங்கிகள், வான் பாதுகாப்பு மற்றும் பீரங்கிகளால் வலுப்படுத்தப்படுகின்றன. இந்த குழுக்கள் இசியமை தாண்டி சென்று கிராமடோர்ஸ்க் மற்றும் செவெரோடோனெட்ஸ்க் நகரங்களைக் கைப்பற்ற ரஷ்யா முயற்சி செய்து வருவதாக பிரிட்டன் ராணுவம் தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில், உக்ரைன் படைகள், ரஷ்யர்களை குறிவைத்து ஹோவிட்சர்கள் போன்ற நீண்ட தூர ஆயுதங்களை பயன்படுத்துவதால் ரஷ்யா மெதுவாக முன்னேறி வருவதாக கூறப்படுகிறது.

போரால் சாலைகள், பாலங்கள் சேதமடைந்து இருப்பதால், தனது ராணுவத்திற்கு தேவையான ஆயுதங்களையும், வெளிநாட்டில் இருந்து அனுப்பப்பட்ட ஆயுதங்களையும், மக்களுக்கான அத்தியாவசிய பொருள்களையும் ரயில்கள் மூலம் எடுத்து செல்லும் முயற்சியில் உக்ரைன் ஈடுபட்டு வருகிறது. இதனால், ரயில் பாதைகள், கட்டமைப்புகளின் மீதான தாக்குதலை ரஷ்ய ராணுவம் தீவிரப்படுத்தி இருக்கிறது.

இது குறித்து உக்ரைன் ரயில்வே தலைவர் ஒலெக்சாண்டர் கமிஷின் கூறுகையில், 'மத்திய மற்றும் மேற்கு உக்ரைனில் உள்ள ஆறு ரயில் நிலையங்களை ரஷ்யா தாக்கியதில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. தாக்குதல் காரணமாக குறைந்தது 14 ரயில்கள் தாமதமாக வந்தன. ரஷ்யாவின் இந்த தாக்குதலில் பலர் பலியாகி உள்ளனர்,' என்று தெரிவித்தார்.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வெளிநாட்டு ஆயுதங்கள் கொண்டு செல்லப்படும் 6 ரயில் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு, முடக்கப்பட்டுள்ளது. 4 வெடிமருந்து கிடங்குகள் மற்றும் 40 உக்ரைன் ராணுவ இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது' என்று தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யா மீது ஐரோப்பா நாடுகள் கடுமையான பொருளாதார தடைகளை விதித்துள்ளன. ஆனால், எண்ணெய் இறக்குமதியை மட்டும் ரஷ்யாவிடம் இருந்து இந்நாடுகள் வாங்கி கொண்டு வருகின்றன. தற்போது, 6வது தொகுப்பாக ரஷ்யாவின் பொருளாதாரத்தை முடக்கும் அளவில், ரஷ்யாவில் இருந்து எண்ணெய் வாங்குவதை தடை செய்யுமாறு 27 நாடுகளை கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

நூற்றுக்கணக்கான உக்ரைன் அகதிகள் அமெரிக்காவுக்குள் நுழைய அந்நாட்டு அனுமதிக்காக மெக்சிக்கோ நகரத்தில் காத்திருக்கின்றனர்.

உக்ரைனுடன் ஒரு எல்லையை பகிர்ந்து கொள்ளும் ரஷ்யாவின் நட்பு நாடான பெலாரஸ், உக்ரைன் ராணுவத்தின் தாக்குதல் திறனை அறிய, 'ஆச்சரியமான சூழ்ச்சி'யை வகுத்துள்ளதாக தெரிவித்துள்ளது.

# வகுப்புவாத பதற்றமேற்படலாமென முன்னெச்சரிக்கை மராட்டிய நவநிர்மாண் சேனா தொண்டர்கள் கைது




மகாராஷ்டிராவில் வகுப்புவாத பதற்றம் ஏற்படுத்தியதற்காக மராட்டிய நவநிர்மாண் சேனா தொண்டர்கள் 150 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

மும்பையில் 1,140க்கும் மேற்பட்ட மசூதிகளில் விதிகளை மீறி அதிகாலை 5 மணியளவில் ஒலிபெருக்கியை உபயோகிப்பது மாநிலத்தின் அமைதியை கெடுக்கிறது எனவும் அனைத்து ஒலிபெருக்கிகளும் மசூதியில் இருந்து நீக்கப்படும் வரை தங்களது போராட்டம் தொடரும் எனவும் மராட்டிய நவநிர்மாண் சேனா தலைவர் ராஜ் தாக்கரே தெரிவித்திருந்தார்.

மசூதிகளுக்கு வெளியே ஒலிபெருக்கியில் அனுமன் பஜனையை படிக்கும்படியும் தனது கட்சித் தொண்டர்களிடம் அவர் கூறியுள்ளார்.

இதனால், சட்டம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கையை கவனத்தில் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மராட்டிய பொலிஸார் கைது நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர். அதன்படி, நாசிக் மாவட்டத்தில் மொத்தம் 150 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

சட்ட விதிகளின்படி நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதிகாரிகளின் அனுமதி இன்றி ஒலிபெருக்கி எதுவும் காணப்பட்டால் அவர்களுக்கு எதிராக நாங்கள் நடவடிக்கை எடுப்போம், என நாசிக் காவல்துறை ஐ.ஜி. சேகர் பாட்டீல் கூறியுள்ளார்.

கடந்த ஏப்ரலில், முதலமைச்சரின் வீட்டின் முன்பாக அனுமன் பஜனை பாட முயன்ற விவகாரத்தில் சுயேச்சை எம்.பி. நவ்நீத் ராணாவும் எம்.எல்.ஏயான அவரது கணவரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கோவோவக்ஸ் தடுப்பூசியை 12 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் செலுத்தலாமென சீரம் இந்தியா நிறுவனத் தலைவர் தகவல்



இந்தியாவில் 12 முதல் 17 வயது வரையிலான குழந்தைகளுக்கான கோவோவக்ஸ் தடுப்பூசிக்கு, கடந்த மார்ச் மாதம் 9 ஆம் திகதி அவசர பயன்பாட்டு அனுமதியை இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு வழங்கியது.

இதுபற்றி சீரம் இந்தியா அமைப்பின் தலைவர் ஆதர் பூனவாலா வெளியிட்ட டுவிட்டர் செய்தியில், நோவோவக்ஸ் நிறுவனத்தினர் உருவாக்கிய கோவோவக்ஸ் தடுப்பூசி, இந்தியாவில் இப்போது குழந்தைகளுக்குக் கிடைக்கிறது.

இந்தியாவில் தயாரிக்கப்படுகிற ஒரே தடுப்பூசி இதுதான். இது ஐரோப்பாவிலும் விற்கப்படுகிறது. இந்தத் தடுப்பூசி 90 சதவீதத்துக்கும் அதிகமான செயல்திறன் கொண்டுள்ளது.

இது நமது குழந்தைகளைப் பாதுகாக்க, பிரதமர் மோடியின் தொலைநோக்குப் பார்வையின் கீழான மற்றொரு தடுப்பூசியாகும்.

கோவோவக்ஸ் தடுப்பூசியை வயது வந்தவர்களுக்கு செலுத்திக் கொள்வது பற்றி பலரும் என்னிடம் கேள்வி கேட்கின்றனர்.

இதற்கான எனது பதில் ஆம் என்பதே. 12 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் இந்த கோவோவேக்ஸ் தடுப்பூசியை செலுத்தி கொள்ளலாம், என்று தெரிவித்து உள்ளார்.

கடந்த வாரம், நோயெதிர்ப்பு சக்திக்கான தேசிய தொழில்நுட்ப ஆலோசனை குழுவானது சீரம் இந்தியா அமைப்பின் கோவோவக்ஸ் கொரோனா தடுப்பூசிக்கு அனுமதி வழங்கியிருந்தமை கவனிக்கத்தக்கது.



## பிளஸ்-2 பொதுத்தேர்வு இன்று ஆரம்பமாகியது

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பிளஸ்-2 பொதுத் தேர்வு கட்டுப்பாடுகளுடன் இன்று தொடங்கியது. 3,262 மையங்களில் 8.69 லட்சம் பேர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். தமிழகத்தில் மட்டும் 3,119 மையங்களில் 8 லட்சத்து 37 ஆயிரத்து 317 மாணவ, மாணவிகள் பரீட்சை எழுதுகின்றனர். 3 லட்சத்து 98 ஆயிரத்து 321மாணவர்களும், 4 லட்சத்து 38 ஆயிரத்து 996 மாணவிகளும்இதில்அடங்குவார்கள்.

இது தவிர தனித்தேர்வாளர்கள் 28,353 பேரும், மாற்றுத்திறனாளிகள் 3,638 பேரும், மூன்றாம் பாலினத்தவர் 6 பேரும், சிறைக்கைதிகள் 73 பேரும் பரீட்சை எழுதுகின்றனர்.

தேர்வில் முறைகேடு நடைபெறாமல் தடுப்பதற்காக 1,000 பறக்கும் படைகள் மற்றும் நிலையான பறக்கும் படைகள் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

## தடுப்பூசி செலுத்தவேண்டுமென கட்டாயம் இல்லை என்கிறது நீதிமன்றம்



இந்தியாவில் இதுவரை 189 கோடியே 23 லட்சம் டோஸ் கொரோனாத் தடுப்பூசிகள் பொதுமக்களுக்கு செலுத்தப்பட்டுள்ளன என தரவுகள் கூறுகின்றன.

இந்த நிலையில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, டெல்லி உள்ளிட்ட பெரும்பாலான மாநிலங்கள் பொதுமக்கள் கட்டாயம் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தன.

தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்கள் பொது இடங்களுக்கு வரக்கூடாது என்றும் உத்தரவிட்டுள்ளன. அவர்கள் பூங்காக்கள், கடற்கரைகள், சினிமா தியேட்டர்கள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட பொது இடங்களுக்கு செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டிருந்தன

இந்த நிலையில் தடுப்பூசி கட்டாயம் என்று பல மாநில அரசுகள் அறிவித்து இருப்பதற்கு எதிராகவும், கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள் பொது இடங்களுக்கு வரக்கூடாது என்று மாநில அரசுகள் கட்டுப்பாடுகள் விதித்ததற்கு எதிராகவும் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

இத்தகைய கட்டுப்பாடுகள் அரசியல் சாசனத்துக்கு எதிரானவை என்றும், மனுவில் கூறப்பட்டு இருந்தது.

இந்த மனுக்கள் மீதான விசாரணை சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதிகள் நாகேஸ்வரராவ், பி.ஆர்.கவாய் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நடந்து வந்தது.

இந்த வழக்கில் வழக்கறிஞர் பிரசாந்த் பூன் ஆஜராகி வாதாடி பல்வேறு வாதங்களை முன்வைத்திருந்தார். அதன் அடிப்படையில் இந்த வழக்கில் மத்திய, மாநில அரசுகள் பதில் அளிக்க வேண்டும் என்று நீதிமன்றினால் நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

இந்த வழக்கு கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி விசாரணைக்கு வந்தபோது தமிழக அரசு சார்பில் ஆஜராகிய வக்கீல், அனைத்து மாநில அரசுகளும் 100 சதவீத மக்களுக்கு தடுப்பூசி போட்டிருக்க வேண்டும் என்று மத்திய அரசு அறிவுரை கூறியதாலேயே தடுப்பூசி போடுவதை கட்டாயமாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது, என்று வாதிட்டார்.

இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள், எந்த ஒரு தனி நபரையும் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்தக்கூடாது என்று தெரிவித்துள்ளனர்.

தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என்று எந்த ஒரு தனி நபரையும் கட்டாயப் படுத்தக்கூடாது. அரசியல் சாசன பிரிவு 21இன் கீழ் தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்துவது சட்ட விரோதமானது.

அதேநேரத்தில் பொதுச் சுகாதாரத்தை மனதில் வைத்து மாநில அரசுகள் முக்கியமான கட்டுப்பாடுகளையும், கொள்கை முடிவுகளையும் எடுக்க அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனாலும் கூட தடுப்பூசியை கட்டாயம் என்று சொல்லி இருந்தால் அந்த ஆணையை மாநில அரசுகள் நீக்க வேண்டும்.

பொது இடங்களுக்கு தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் வரக்கூடாது என்று மாநில அரசுகள் அறிவிப்பாணைகளை பிறப்பித்திருந்தால் உடனடியாக அவற்றைத் திரும்ப பெற முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் மீது ஏதாவது கட்டுப்பாடுகள் விதித்திருந்தால் அவை அனைத்தையும் திரும்ப பெறுவது பற்றி மறுபரிசீலனை செய்யுங்கள்.

தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களுக்கு எதிர்விளைவுகளும் உடல் நலப் பாதிப்புகளும் ஏற்படுகின்றன என்று புகார்கள் வருகின்றன.

ஆனால், அது தொடர்பாக தெளிவான, வெளிப்படையான தகவல்கள் எதுவும் இல்லை. எனவே தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு ஏதாவது எதிர்விளைவுகள் வந்தால் அது தொடர்பாக முறையாகத் தெரிவிக்க வேண்டும்.

தடுப்பூசி செலுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தக்கூடாது. அதே நேரத்தில் தடுப்பூசி போடாதவர்களை பொது இடங்களுக்கு வருவதைத் தடுக்கக்கூடாது.

மத்திய அரசு வகுத்துள்ள கொரோனாத் தடுப்பூசி கொள்கை தன்னிச்சையானதோ, ஒருதலைப்பட்சமானதோ இல்லை. எனவே சிறிய மாற்றங்களைச் செய்யுங்கள். தடுப்பூசி செலுத்துவதற்கு அவர்களாக முன்வந்தால் போடுங்கள், கட்டாயப்படுத்த வேண்டாம், என்று நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

# மாணவனின் மருத்துவ சிகிச்சைக்கு தமிழ் மக்கள் இளைஞர் அணி உதவி



(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு மாவட்டம் நாவற்காடு கலைமகள் கனிஷ்ட பாடசாலையில் கல்வி பயிலும் மாணவன் ஒருவன் தனது கால்களில் ஏற்பட்ட சுகவீனத்திற்கு இந்தியா சென்று சிகிச்சை பெறுவதற்காகத் தமது பங்களிப்பாகத் தமிழ் மக்கள் இளைஞர் அணியினரால் ஒரு லட்சம் ரூபா நிதி உதவியை நேற்று புதன்கிழமை வழங்கி வைத்தனர்.

அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எஸ்.நிரோஜன் தலைமையில் மட்டக்களப்பு நாவற்காடு கலைமகள் கனிஷ்ட வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் வித்தியாலய அதிபர் மு.சிறிதரன், அமைப்பின் நிர்வாக உறுப்பினர்கள், மாணவனின் தாயார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கடந்த சில மாதங்களாக குறித்த மாணவனுக்கு காலில் ஏற்பட்ட திடீர் சுகவீனத்தால் இருகால்களும் இயங்காமல் போயுள்ளன.

இதற்கு இந்தியாவில் சிகிச்சை பெறும் வகையில் இலங்கையிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் உள்ள தமிழ் மக்கள் இளைஞர் அணியினரால் இந் நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## விபுலானந்தா கற்கை நிறுவக மாணவர்கள் விடுதிகளில் இருந்து முற்றாக வெளியேற்றம்

### மட்டக்களப்பு நீதிவானின் உத்தரவை அடுத்து

மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகத்தின் மாணவர் ஒன்றிய தலைவர் வி.சுரேந்திரன் உள்ளிட்ட அனைத்து மாணவர்களும் விடுதியில் இருந்து வெளிச்செல்லுமாறு, மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவு ஒன்றை, திங்களன்று பிறப்பித்துக் கட்டளையிட்டது.

பல்கலைக்கழகத்தில் இம் மாதம் முதலாம் திகதியில் இருந்து எதிர்வரும் 29ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில், விடுதியில் இருந்து மாணவர்கள் வெளியேறுமாறு நிர்வாகம் அறிவித்தபோதும் மாணவர்கள் விடுதியில் இருந்து வெளியேறாமல் திங்களன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை தொடர்ந்து சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜ.பி.கெனடி, காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கினார்.

இதனையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுமிந்த நயனசிறி தலைமையில் நீதிமன்றத்தில் மேற்படி தடை உத்தரவு கோரப்பட்டது.

நீதிமன்ற தடை உத்தரவையடுத்து மாணவர்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

## திருமலைக்கு புதிய அரச அதிபர்



திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான பி.எச்.என்.ஜயவிக்ரம தமது கடமைகளை இன்று உத்தியோகபூர்வமாக மாவட்ட செயலகத்தில் தமது பொறுப்புகளை ஏற்றார்.

சிறிஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வியாபார நிர்வாகமாணி விசேட பட்டமாக ஆரம்ப பட்டத்தை பூர்த்தி செய்த இவர், பொதுநிர்வாக முதுமாணிப் பட்டத்தை இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவனத்திலும், பிரயோகப் பொருளாதாரத்தில் முதுமாணிப் பட்டப்பின் பட்டத்தை பேராதனை பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்துள்ளார்.

1992 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப்பரீட்சை மூலம் இச்சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்ட இவர் மெதிரிகிரிய உதவி பிரதேச செயலாளர், ஹிக்கடுவ உதவி பிரதேச செயலாளர், மலையக விவசாயிகள் புனர்வாழ்வு திணைக்களத்தின் உதவி ஆணையாளர், மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சின் பிரதி பணிப்பாளர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார்.

மேலும் பிரதமர் அலுவலகத்தின் உதவி செயலாளர், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதி கட்டுப்பாட்டாளர், கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் தொழில் முயற்சிகள் ஊக்குவிப்பு திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர், மத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் ஆணையாளர், மத்திய மாகாண விவசாயம், சிறிய நீர்ப்பாசனம், கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி திணைக்களத்தின் செயலாளராகவும் கடமையாற்றிய இவர் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட முன்னர் மத்திய மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம்,சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சின் செயலாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## வைத்தியர் முரளீஸ்வரனின் கன்னி கவிதை நூல் வெளியீடு







(காரைதீவு நிருபர் சகா)

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இரா. முரளீஸ்வரனின் ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாள்கள் கவிதை நூல் வெளியீடு கடந்த சனிக்கிழமை அன்று மட்டக்களப்பு பிள்ளையாரடி தமிழ்ச்சங்க கலையரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில், சங்கத்தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு முன்னிலை அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத்தலைவர் பேராசிரியர் செ. யோகராசா கலந்து சிறப்பித்தார்.

முதன்மை அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் வைத்திய கலாநிதி.வே.விவேகானந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

முன்னதாக பவளவிழாக் கண்ட நூலாசிரியரின் தாயார் திருமதி பாலநாகம்மா இராசரெத்தினம் 75 ஆவது பிறந்த தினத்தை தமிழ் சங்கத்தினர் மேடையில் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

நூலாசிரியர் அறிமுக உரையை தேசபந்து மு.செல்வராசா நிகழ்த்த, நூல் வெளியீட்டு உரையை தேசமான்ய விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்தினார்.

நயவுரையை அருட்தந்தை அ.அ.நவரெத்தினம் நிகழ்த்த வாழ்த்துரைகளை வைத்தியர்களான புஷ்பலதா லோகநாதன், பா.யூடி ரமேஷ் ஜெயகுமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர்.க.கலாரஞ்சனி, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் குண.சுகுணன் ஆகியோர் கலந்துகொண்டனர். நூலின் முதல்பிரதியை மட்டக்களப்பு தமிழ்ச்சங்க பொருளாளர் தேசபந்து மு.செல்வராசா பெற்றுக்கொண்டார்.

கதிரவன் த.இன்பராசாவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் உள்நாட்டு இறைவரித்திணைக்கள சிரேஷ்ட ஆணையாளர் சட்டத்தரணி மு. கணேசராசா வரவேற்புரை. நிகழ்த்த, கலைக்கோகிலம் நாட்டியப்பள்ளி மாணவியரின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

உரைகளை தொடர்ந்து ஏற்புரையை நூலாசிரியர் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் முரளீஸ்வரன் நிகழ்த்த நன்றி உரையை துணை செயலாளர் திருமதி பிரியா கருணாகரன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் நூல் இலவசமாக வழங்கப்பட்டது. அழைப்பிதழில் 'வாழ்த்துக்கள் மட்டுமே அன்பளிப்பாக ஏற்றுக் கொள்ளப்படும்' என்று குறிப்பிடப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

வைத்தியர் இரா. முரளீஸ்வரன் ஒரு சிறந்த மருத்துவ நிர்வாகி மட்டுமல்லாமல் ஓர் உன்னத இலக்கியப் படைப்பாளியுமாவார். 1976 இல் யாழ்ப்பாணம் நெல்லியடியில் பிறந்து 1985 ஆம் ஆண்டுகளின் பின்னர் மட்டக்களப்பில் வாழ்ந்து வரும் இவர் தனது கல்வியை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும், மருத்துவ பட்டப்படிப்பை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும், மருத்துவ நிர்வாக முதுமாணியை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மருத்துவராக 2005ஆம் ஆண்டிலிருந்து கடமையை தொடங்கி 2013ஆம் ஆண்டு கல்முனை ஆதாரவைத்தியசாலை வைத்திய அத்தியட்சகராகி தற்போதுவரை அங்கு தொடர்ந்து பணிபுரிகின் றார். மருத்துவ அனுபவங்களும் கவிதை அனுபவமும் இணைந்த மருத்துவமனை நாள்களைப்பற்றிய கவிதைத் தொகுப்பாக இந்நூல் வெளியிடப்பட்டது.

# எங்களது வரலாறுகள் வித்தியாசமானவை பேசுவதற்குரியகாலம் இன்னும் இருக்கிறது

## சிறிதரன் தெரிவிப்பு





எங்களது வரலாறுகள் வித்தியாசமானவை, அதனை பேசுவதற்குரிய காலம் இன்னும் இருக்கிறது என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு – விசுவமடு மத்தியில் அமைந்துள்ள சனசமூக நிலைய வளாகத்தில் நீண்ட காலம் வசித்து வந்த வயோதிப தம்பதியினருக்கு வோல் தம் ஸ்ரோ லண்டன் கற்பக விநாயகர் ஆலய ஸ்தாபகர் கோபாலகிருஷ்ணனால் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியில் வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டது. இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

எங்களுடைய மக்கள் இன்றும் வீடுகள் இன்றி அல்லல்படுகின்றார்கள். குறிப்பாக நீண்ட எதிர்பார்ப்புகளோடும், கனவுகளோடும் வாழ்பவர்களுக்கு அவர்களுடைய இறுதிக்காலத்தில் நிம்மதியாக வாழ்வதற்கு ஒரு வீடு லண்டன் கற்பக விநாயகர் ஆலயத்தின் ஸ்தாபகர் கோபாலகிருஷ்ணனால் வழங்கப்பட இருக்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு மட்டுமல்லாது வடக்கு, கிழக்கு, மலையகம் என்று அவருடைய பணிகள் மிகப்பெரிய பணியாக இருக்கின்றன. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலேயே பழைமையான கட்டடம் ஒன்று இன்றுவரையும் இருக்கின்றது. அந்தக் கட்டடத்தில் விவேகானந்தர் வந்து பேசினார், நாவலர் வந்து சென்றவர், மகாத்மா காந்தி வந்து பேசினார். அதன் அடையாளமாக அந்தக் கட்டடம் இன்றும் இருக்கின்றது.

இதிலும் பெரும்பெரும் மகான்களும், தலைவர்களும் தடம் பதித்த இடம். பழைய வரலாறுகள் வித்தியாசமானவை.

அதனைப் பேசுவதற்கு இன்னும் காலம் இருக்கிறது. எங்களை நாங்களே ஆளுகின்ற ஆட்சி வரட்டும் அதன் பின்னர் எங்கள் அடையாளங்களைப் பலப்படுத்தலாம். ஆயிரம் ஆயிரம் மனிதர்களையும், வரலாறுகளையும் கொண்ட இந்த சனசமூக நிலைய வளாகம் புனிதத்திற்குரிய இடமாக இருக்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# அதிபர் தண்டித்தமையால் பாடசாலைக்குத் தீ!

பாணந்துறையில் பாடசாலை ஒன்றின் அதிபரின் அலுவலகம் மற்றும் கணனி ஆய்வு கூடத்திற்கு மாணவர்கள் இருவர் தீ வைத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 12 மற்றும் 8 வயதுடைய இரண்டு சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாணவர் ஒருவர் அணிந்து வந்த கையுறை தொடர்பில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் அதிபர் தண்டனை வழங்கியுள்ளார்.

இதனால் கோபமடைந்த மாணவர் மற்றுமொரு மாணவனுடன் இணைந்து அதிபரின் நாற்காலிக்கு தீ வைத்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் பாடசாலை ஒன்றில் தீ பரவியுள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்து பாணந்துறை வடக்கு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த தீ விபத்தில் கணினி ஆய்வகத்தில் இருந்த இருபதுக்கும் மேற்பட்ட கணினிகள், துணைக்கருவிகள், மின்விசிறிகள், ஏராளமான பாடப்புத்தகங்கள், அதிபரின் நாற்காலி மற்றும் பல கோப்பைகள் எரிந்து நாசமாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்தின் போது பாடசாலை மூடப்பட்டிருந்ததுடன் தீ பரவுவதைக் கண்ட குடியிருப்புவாசிகள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

குறித்த இரு மாணவர்களும் அதிபரின் அறையில் இருந்த சாவியை எடுத்து ஏனைய வகுப்பறைகளைத் திறந்து உடைமைகளுக்கு சேதம் ஏற்படுத்தியுள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. பாணந்துறை வடக்கு பொலிஸார் அப்பகுதியில் உள்ள வீதியின் இருபுறமும் உள்ள சி.சி.டி.வி. காட்சிகளை ஆய்வு செய்ததில் இரு மாணவர்கள் சைக்கிளில் சென்று சிறிது நேரத்தில் திரும்பி வருகின்றமை தெரியவந்தது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது இரண்டு மாணவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# தமிழக முதல்வர் ஸ்டாலின் இலங்கைக்கு வரவேண்டும்

## மனோ கணேசனின் அழைப்பு

தமிழக முதல்வர் இலங்கைக்கு வழங்கவுள்ள நிவாரண உதவிகள், இலங்கைக்கும் தமிழகத்துக்கும் இடையிலான உறவுக்கு வழிவகுக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று புதன்கிழமை உரையாற்றிய மனோ கணேசன், தமிழக முதல்வரின் நிவாரணத்தை தாம் வரவேற்கிறோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்திய வம்சாவளிகள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட 200 ஆவது வருட நிறைவை முன்னிட்டு தமது கட்சி ஒழுங்கு செய்துள்ள நிகழ்வுக்கு தமிழக முதல்வரை அழைப்பதற்குத் தாம் தயாராகி வருகிறோம் எனவும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

# அரசியல் பிரமுகருக்கு சொந்தமான வர்த்தக நிலையம் கட்டுநாயக்கவில்!

பிரபல அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள் உள்ளிட்ட பலர் தொடர்புபட்ட ஊழல் மோசடிகள் தொடர்பான ஆவணங்களை மக்கள் விடுதலை முன்னணி அம்பலப்படுத்தியுள்ளது.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரி மண்டபத்தில் விசேட ஊடக சந்திப்பை நடத்தி அந்த ஆவணங்களை ஜே.வி.பி. தலைவர் அநுர குமார திசாநாயக்க அம்பலப்படுத்தியுள்ளார்.

நாட்டை சீரழித்த திருடர்களை மொத்தமாக வெளிப்படுத்தல் எனும் தொனிப்பொருளில் ஜே.வி.பியின் ஊழல் ஒழிப்பு பிரிவினரால் சேகரிக்கப்பட்ட ஆவணங்களை கொண்ட 500 இற்கும் மேற்பட்ட கோப்புகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆவணங்கள் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள வர்த்தக நிலையம் எப்படி மஹிந்தானந்த அளுத்கமகேவிற்கு சொந்தமானது என்பதை தேடிப்பார்க்க வேண்டும் எனவும் அநுர தெரிவித்துள்ளார்.

# குறைந்த விலையில் சமையல் எரிவாயு இறக்குமதி தொடர்பில் லிற்றோ அறிவிப்பு

அடுத்த வருடத்துக்காவது இலங்கைக்கு குறைந்த விலையில் சமையல் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கு தாய்லாந்தின் சியாம் எரிவாயு நிறுவனத்துடன் ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போது இந்த விடயத்தை லிற்ரோ நிறுவனத்தின் தலைவர் விஜித ஹேரத் அறிவித்துள்ளார். மேற்படி உடன்படிக்கையை இந்த வாரத்திற்குள் கைச்சாத்திட எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தாய்லாந்தின் சியாம் எரிவாயு நிறுவனத்திடமிருந்து ஒரு வருடத்திற்கு சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த இரு ஆண்டுகளில் எரிவாயுவை இறக்குமதி செய்யும் நிறுவனமானது மெற்றிக் தொன் ஒன்றுக்கு அறவிட்ட தொகையை விட 9 டொலர் குறைவாக புதிய நிறுவனத்திடமிருந்து எரிவாயுவை பெற முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக, ஓமானில் இருந்து நாட்டுக்கு எரிவாயு இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. எனினும், குறித்த நிறுவனத்துடனான ஒப்பந்தம் நிறைவடைகிறது. இதற்கமைய எதிர்வரும் 2 ஆண்டுகளுக்கு எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்காக விலைமனு கோரப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.05.2022இல் வெளியிடப்பெற்றது.